சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | அண்ணாதுரை |
| தந்தை பெயர் | : | லெட்சுமணன் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கார் மெக்கானிக் |
| வயது | : | 50 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கார் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா-1 கார்த்திகேயன் என்பவரை தெரியும். 1 ம் எதிரி ஆறு (எ) சரவணகுமார் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 30.06.2011 ஆம் தேதி சிங்களாந்தியில் குடியிருந்தபோது நான் கடைதெருவிற்கு வருவதற்காக வந்துக்கொண்டிருந்தேன். அ.சா-2 தனபால் என்பவர் வீட்டிற்கு அருகே சண்டை நடந்தது. அது சம்மந்தமாக போலீசார் விசாரிக்க வந்தார்கள். சண்டை நடந்து இடம் எனக்கு தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று சொன்னேன். போலீசார்

என்னையும், சிவானந்தம் என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். நான் சரி என்று சொன்னேன். அவர்காக எழுதிக்கொண்ட ஒரு பேப்பரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன்.எ ன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். இந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்த விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் கையெழுத்து செய்த பார்வை மகஜரில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியது என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியும். என்ன எழுதியிந்தது என்பதை என்னால் குறிப்பாக சொல்ல இயலுமா என்றால் நாட்கள் அதிகமானதால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை. என்னை அ.சா-1 கார்த்திகேயன் தான் அழைத்து வந்தாரா என்றால் போலீசார் அழைத்ததன் பேரில் நீதிமன்றத்திற்கு நான் வந்தேன். அ.சா-1 எனது ஊர்காரர் என்று சொன்னால் இல்லை பக்கத்து ஊர்காரர். நான் சொல்வது போல் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், நான் அங்கு வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.29 17:42:34 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.